**செய்தி வெளியீடு எண்: 575** **நாள்: 03–10–12**

**<u>செய்தி வெளியீடு</u>**

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும் வணிக சமுதாயத்தின் நலன்களை காப்பதிலும், பல்வேறு நலத் திட்ட உதவிகளை வணிகர்கள் பெறுவதிலும் தமிழ்நாடு வணிகர் நல வாரியம் முக்கிய பங்காற்றுகின்றது.

வணிகர் நல வாரியத்தின் மூலம் வணிகர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு குடும்ப உதவித் தொகை, மருத்துவ உதவித் தொகை, கல்வி உதவித் தொகை, தீ விபத்து நிவாரணத் தொகை என பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்நலத்திட்டங்களை செயல்படுத்துவதற்காகவும், வாரியத்தின் நிர்வாக செலவினங்களுக்காகவும், தொகுப்பு நிதியாக (Corpus fund) 2 கோடி ரூபாய் அரசு பங்காக வழங்கப்பட்டது. இத்தொகை பாரத ரிசர்வ் வங்கியில் வைப்புத் தொகையாக வைக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகை, இவ்வாரியத்தின் தலையாய நிதி ஆதாரமாக விளங்குகிறது. மேலும், வாரிய உறுப்பினராவதற்கு வணிகர்களிடம் சேர்க்கைக் கட்டணமாக வசூலிக்கப்படும் சந்தா தொகையான 500 ரூபாயும், இதற்கு இணையாக அரசு அளிக்கும் மானியத் தொகையும் தான் இந்த வாரியத்தின் நிதி ஆதாரங்களாக உள்ளன. இந்த நிதியிலிருந்து தான் வணிகர் நல வாரியம் வணிகர்களுக்கான நலவாழ்வுத்திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் உறுப்பினராக சேருவதை ஊக்குவிக்கும் வகையில், உறுப்பினராக சேரும்போது ஆயுட்கால சந்தாவாக 500 ரூபாய் செலுத்தினால் போதுமானது என்றும், உறுப்பினர் புதுப்பித்தல் கட்டணமாக ஆண்டுதோறும் 100 ரூபாய் செலுத்த தேவையில்லை என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும், 2006 ஆம் ஆண்டு மதிப்புக்கூட்டு வரிச்சட்டத்தின்கீழ் பதிவு பெறாத, தொழில் வரி உச்சவரம்புக்குக் கீழே உள்ள சிறு வணிகர்களும், உள்ளாட்சி நிறுவனங்களிடமிருந்து பெற்ற உரிமத்தின் அடிப்படையில் இவ்வாரியத்தில் உறுப்பினர் ஆகலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதன் காரணமாக, இவ்வாரிய உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டும், அதனால் அதிகரித்து வரும் நலத்திட்ட உதவித் தொகையை கருத்தில் கொண்டும், அரசால் வணிகர் நல வாரியத்திற்கு வழங்கப்பட்ட தொகுப்பு நிதியினை 2 கோடி ரூபாயிலிருந்து 5 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதன் மூலம், வணிகர் நல வாரியத்தின் உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகள் எளிதில் கிடைக்க வழிவகை ஏற்படும்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.
நாள் :- 3.10.2012.